என்று சொன்னார்கள். அதற்கு பிறகு கூடவாய்ப்பு உள்ளவர்கள் விவாதிக்கலாம். பின்னாலே நிதி நிலை மீதான பொது விவாதம் வருகின்றபோதும், விடப்பட்டவர்கள் பேசுவதற்கு வாய்ப்பைப் பெறும்போது, அப்போதும் பேசலாம். ஆகவே இதற்கு என்று தனியாக இரண்டு நாள் ஒதுக்கவேண்டும் என்று இல்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசி முடிவு எடுக்கலாம்.

3. அறிவிப்புகள்.

(அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை — உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு சில அறிவிப்புகள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவையில் (செனட்) இச்சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த திருவாளர்கள் செஞ்சி ந. இராமச்சந்திரன், ஏ. சின்னதுரை, கே. எம். தங்கமணி ஆகியோரின் பதவிக் காலம் 1983 டிசம்பர் மாதம் 5—ஆம் தேதியுடன் முடிவடைந்து விட்டதால் அப்பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாட்களை 17-2-1984 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாட்கள் 20-2-84 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 21-2-84 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு மேற்படுமாயின் 22-2-1984 புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(ஆ) சென்னை பல்கலைக் கழகப் பேரவை — உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆட்சிக் குழுவில் (செனட்) இச்சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த திருவாளர்கள்

துரைமுருகன், சி. பழனிமுத்து, ஏ. சி. சண்முகம், எஸ். ஜகத்ரட்சகன், கே. பாலசுப்பிரமணியன், டாக்டர் கே. பி. இராமலிங்கம் ஆகியோரின் பதவிக் காலம் 1984 பிப்ரவரி மாதம் 5-ம் தேதியன்று முடிவடைந்துவிட்டதால் அப்பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து அறுவரை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 17-2-1984 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 20-2-1984 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 21-2-1984 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஆறுக்கு மேற்படுமாயின் 22-2-1984 புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள் விதி 1-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை ந்தப் பேரவையின் எட்டாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (பேனல் ஆஃப் சேர்மென்) நான் நியமிக்கிறேன்.

1. திரு. வே. இரா. ஜெயராமன்.
2. டாக்டர் கே. சமரசம்.
3. டாக்டர் கே. சௌரிராஜன்.
4. திரு. சு. பாலன்.
5. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS